சுருக்கம்

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் – மாவட்ட கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் – மாற்றியமைத்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (சுசூ.3) துறை

**அரசாணை (நிலை) எண். 181** **நாள். 17.10.2024.**

**திருவள்ளுவர் ஆண்டு 2055**

**குரோதி புரட்டாசி – 31**

**படிக்க:**

1) அரசாணை (நிலை) எண். 163, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (சுசூ.III) துறை, நாள் 09.06.1998.

2) அரசாணை (நிலை) எண். 79, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (சுசூ.III) துறை, நாள் 23.04.2022.

3) தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணைய உறுப்பினர் செயலர் / சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட 06.09.2024 ஆம் நாளிட்ட கடிதம்.

**ஆணை :**

அரசு, மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாட்டில் கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தை கண்காணிப்பதற்கும் செயலாக்குவதற்கும் மாநில அளவில், மாவட்ட அளவில் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமப் பகுதிகளில் 19.02.1991 ஆம் நாளிட்ட கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின் 4 ஆம் பிரிவின் கீழ் மூன்று கடலோர மேலாண்மை அதிகார மன்றங்களை அமைத்துள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், அரசு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கான மாவட்ட கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தை (DCZMA) மாற்றியமைத்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமப் பகுதிகளுக்கான மாவட்டக் கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் என்பதை சென்னை மாவட்டத்திற்கான மாவட்டக் கடலோர மண்டல

மேலாண்மை ஆணையம் என பெயர் மாற்றம் செய்து, சென்னை மாவட்டம் நீங்கலாக ஏனைய சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமப் பகுதிகளைப் பொறுத்தவரையில் தொடர்புடைய மாவட்டக் கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தை அதிகார மன்றமாக நியமித்துள்ளது.

3. தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணைய உறுப்பினர் செயலர் / சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர், கருத்துரு ஒன்றை அனுப்பி, மாவட்ட நிருவாக அலுவலர்களால், அதாவது கிராம நிருவாக அலுவலர், வட்டாட்சியர் ஆகியோர் ஏனைய துறை அதிகாரிகளுடன் இணைந்து, விதிமீறல் மனுக்களை சரிபார்த்து உறுதி செய்ய வேண்டும் என்று தெரிவித்ததுடன், திறன்மிகு நிருவாக வசதிக்காகவும், மாவட்ட கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் தலைவர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து செயல்படவும், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரை (பொது), மாவட்டக் கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினர்–செயலராகவும் நியமிக்கலாம் எனவும் அறிவுறித்தியுள்ளார். தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளரின் பொறுப்பில் எவ்வித மாற்றமுமின்றி தொடர்ந்து ஆணையத்தின் ஒருங்கிணைப்பாளராக இருப்பார்.

4. எனவே, தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினர் செயலர் / சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர், தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களுக்கான மாவட்டக் கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தை மேம்படுத்தப்பட்ட பணிகள் மற்றும் பொறுப்புகளுடன் மாற்றியமைக்கத் தேவையான ஆணைகளைப் *பிறப்பிக்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.*

5. தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினர் செயலர் / சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் அளித்த கருத்துருவை கவனமாக ஆய்வு செய்த பின்னர், அரசு அதை ஏற்றுக்கொண்டு அதற்கிணங்க தமிழ்நாடு கடலோர மாவட்டங்களிலுள்ள மாவட்ட கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் பின்வருபவர்களை கொண்டு மாற்றியமைக்கப்படுகிறது:–

| | | |
|---|---|---|
| 1 | கடலோர மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியர் | தலைவர்<br>அலுவல் முறையில் |
| 2 | நகராட்சி நிருவாகத்தின் மண்டல/இணை இயக்குநர் | துணைத் தலைவர்<br>அலுவல் முறையில் |
| 3 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் | உறுப்பினர் – |

| | | |
|---|---|---|
| | (பொது) | செயலர்<br>அலுவல் முறையில் |
| 4 | வன உயிரின காப்பாளர்/ துணை இயக்குநர் | உறுப்பினர்<br>அலுவல் முறையில் |
| 5 | மாவட்ட வன அலுவலர் | உறுப்பினர்<br>அலுவல் முறையில் |
| 6 | நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் துணை / உதவி இயக்குநர் | உறுப்பினர்<br>அலுவல் முறையில் |
| 7 | பேரூராட்சி துணை/உதவி இயக்குநர் | உறுப்பினர்<br>அலுவல் முறையில் |
| 8 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் துணை/ உதவி இயக்குநர் | உறுப்பினர்<br>அலுவல் முறையில் |
| 9 | தொழில் மற்றும் வணிகத்துறை துணை / உதவி இயக்குநர் | உறுப்பினர்<br>அலுவல் முறையில் |
| 10 | நில அளவை மற்றும் நில வரித் திட்ட துணை/உதவி இயக்குநர் | உறுப்பினர்<br>அலுவல் முறையில் |
| 11 | சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும முதுநிலை செயல் அலுவலர் / பிரதிநிதி (சென்னை மாவட்டத்திற்கு) | உறுப்பினர்<br>அலுவல் முறையில் |
| 12 | பெருநகர சென்னை மாநகராட்சியின் முது நிலை அதிகாரி / பிரதிநிதி (சென்னை மாவட்டத்திற்கு) | உறுப்பினர்<br>அலுவல் முறையில் |
| 13. | மீனவ இனத்தைச் சேர்ந்தவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமனம் செய்யப்பட்டவர்கள் உட்பட, உள்ளூர் மரபுவழி கடலோர சமூகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் மூவர் | உறுப்பினர்கள் |
| 14. | சம்பந்தப்பட்ட கடலோரப் பகுதிகளுக்கான தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், | உறுப்பினர் – கூட்ட ஏற்பாட்டாளர் |

- மாவட்ட கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமனம் செய்யப்பட்ட, மீனவ இனத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட உள்ளூர் மரபுவழி கடலோர சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளின் பதவிக்காலம் அத்தகைய நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாக இருக்கும்.
- தேவை ஏற்படுமாயின், கருத்துருவை கூர்ந்தாய்வு செய்வதில் உதவும் பொருட்டு, சிறப்பு அழைப்பாளர் / நிபுணர் / அரசு அலுவலர்கள் ஆகியோரை மாவட்ட கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் கோரலாம்.
- மாவட்ட கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் நடைபெறுவதற்கு தேவையான உறுப்பினர்களின் குறைவெண் வரம்பு, மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு ஆகும்.

6. தற்போது நிலவுகிற சூழலுக்கேற்ப மாவட்ட கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்திற்கு பின்வரும் கடமைகளும், பொறுப்புகளும் நிர்ணயிக்கலாம்:–

a) திட்டக் கருத்துருவின் அனுமதிக்காக விண்ணப்பத்தைப் பெற்ற பின்னர், அது அங்கீகரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்திற்கேற்றவாறும், அப்போது நடைமுறையில் உள்ள கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுக்கு ஏற்பவும் உள்ளதா என்பதை ஆய்வு செய்து, அத்தகைய விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் அரசுக்கு பரிந்துரைகளை வழங்க வேண்டும்.

b) கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கைகளின் விதித்துறைகளை நடைமுறைப்படுத்துதல் / செயல்படுத்துதல் மற்றும் அவற்றை கண்காணிப்பதும் அங்கீகரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தின்படி கடலோர ஒழுங்குமுறை மண்டலத்திற்குள் செயல்பாடுகள் நடைபெறுவதை உறுதி செய்வதும் ஆணையத்தின் பொறுப்பாகும்.

c) 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் விதித்துறைகள் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளை மீறுவதாகக் கூறப்படும் நேர்வுகளை ஆணையம் விசாரிக்க வேண்டும்; மேலும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் விதித்துறைகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் மீறல்கள் அல்லது அவற்றிற்கு முரணான செயல்கள் தொடர்புடைய நேர்வுகளை மறு ஆய்வு செய்தல்.

d) மேற்சொன்ன அறிவிக்கைக்கு எதிரான மீறல்கள் அல்லது முரணான செயல்கள் தொடர்பான நேர்வுகளை ஆணையம் தாமாக முன்வந்து அல்லது யாதொரு தனிநபர் அல்லது அமைப்பு அல்லது நிருவாக அமைப்பினால்

அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் விசாரணை செய்து அல்லது மறுஆய்வு செய்து, விதிமீறல் நேர்வுகள் குறித்த விரிவான அறிக்கையை தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்திடம் அளிக்க வேண்டும்.

e) உறுதிப்படுத்தப்பட்ட விதிமீறல் நேர்வுகள் மீது தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் அறிவுறுத்தல்களின்படி நடவடிக்கை எடுத்தல்.

f) கரையோரச் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் இடருக்கு எதிரான பாதுகாப்பு தொடர்பாக எந்தவொரு நிதியுதவியளிக்கப்பட்ட விசாரணை / ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் மாநில ஆணையத்திற்கு உதவுதல்.

g) கடலோரப் பகுதிகளின் பாதுகாப்பு மற்றும் இடர்காப்பு தொடர்பான எந்தவொரு நேர்விலும் மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

h) மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட அளவிலான கடலோர பாதுகாப்பு தொடர்பான மாநில அரசின் நடவடிக்கைகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்தல்.

7. இந்த அரசாணை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் 30.09.2024 நாளிட்ட அ.சா.கு. எண் 14520/G1.II(1)/2024-1 வாயிலாக வழங்கப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

P. செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
உறுப்பினர் செயலர்,
தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் / இயக்குநர்,
சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை, சென்னை -15.
செயலாளர், ஒன்றிய அரசு,
சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை, புது தில்லி – 110003.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை -9.
அரசு முதன்மைச் செயலாளர் (முகூபொ),
கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை,
சென்னை -9.
அரசு முதன்மைச் செயலாளர்,
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை -9.
அரசு முதன்மைச் செயலாளர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை -9.
கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,

சென்னை –5.
அரசு முதன்மைச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை –9.
அரசு செயலாளர்,
தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, சென்னை –9.
நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை –2.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறை தலைவர்),
சென்னை – 32.
தலைவர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், சென்னை –32.
உறுப்பினர் செயலர், பெருநகர சென்னை மாநகராட்சி வளர்ச்சிக் குழுமம்,
சென்னை –8.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், சென்னை மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கல்பட்டு மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், மயிலாடுதுறை மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம் மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம்.

நகல் பெறுவோர்
முதன்மை கணக்குத்துறை தலைவர், சென்னை –18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை –35.
மாண்புமிகு அமைச்சரின் (நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்) முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –9.
சிறப்பு செயலாளரின் (சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்) தனிச் செயலர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்